போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 சித்திரை 5 17-4-48 சனிக்கிழமை | வீச்சு 35

ஆசிரியர்கள்:

1789 ஜூலை 14-ல் நடந்தபுரட்சியின் போது, பாஸ்டில்சிறைக்
கூடத்தை, மக்கள் தாக்கியபோது, வாழ்க வால்டேர் என்று
முழக்கமிட்டனர். வால்டேர் போர்வீரரல்ல, ஆனால், பொறு
த்துப்பொறுத்து, தன்மான உணர்வு மரத்துப்போகும் நிலையிலே
இருந்த மக்களைத்தட்டி எழுப்பிய புரட்சிக்காரன், பகுத்தறிவுத்
தந்தை! பேனா முனைகொண்டு, அரண்மனைகளை, அஞ்ஞானி
களின் கோட்டைகளைத், தாக்கியவீரன். கேலியால், கண்டனத்
தால், ஆராய்ச்சியால், அறிவுரையால், வைதீகமூடுபனியை சிதற
டித்த புது உலகத்தூதன்! வீரரின்வாளை விலைக்குவாங்கமுடிந்தது,
எதிர்த்து ஒடிக்க முடிந்தது,
வஞ்சித்து வளைக்கமுடிந்தது.
வால்டேரின் பேனாவை,அடக்
குமுறை, சிறை, நாடுகடத்தல்
எனும் எவையினாலும், வளை
க்கவும் முடியவில்லை. வால்
டேர், தயாரித்த புரட்சிக்கரு
த்துக்கள் பொது மக்கள்
உள்ளத்தில் குடிஏறி, ஒன்று
பத்து நூறுகவளர்ந்தன. அறி
வுச் சுடரை ஆண்மையுடன்
ஏந்திச்சென்ற அந்த அஞ்சா
நெஞ்சன் காட்டிய பாதையி
லேதான், பாஸ்டிலியைத் தக
ர்த்த புரட்சிவீரர்கள் அன்று
சென்றனர், வால்டேர் தயா
ரித்துக்கொடுத்த வெடி
குண்டை வீசினர், வென்
றனர். வாழ்க வால்டேர்!

— சி. என். அண்ணாதுரை

பாதிரி உருவில் பாதகன்

" தொலைந்தான் அந்தப் பேயன், தொலைந்தான் !"

" தீர்ந்தது பீடை "

" ஆம், ஒழிந்தது சனியன் !"

" அழிந்தது மமதை !"

" சாய்ந்தது ஆணவம் ! உன் சபதமும் பலித்தது !"

" அப்பாடா ! ரஷ்யா பிழைத்தது ! பாதகன் தொலைந்தான் ! மாபாவி ஒழிந்தான் ! ஊரைக் குலுக்கி வந்த உலுத்தன் அழிந்தான் ! முடிசார்ந்த மன்னரையெல்லாம் தன் அடிபணியச் செய்த பேயன் முடிவில் ஒரு பிடி சாம்பலாய்ப் போனான் !"

" ஆமாம் பொரிச்கிவிடிச், ஆமாம்; அவன் ஒரு பேயன்தான் ! பழிகாரன் தான் ! மாபாவிதான் ! கெடிய பாதகன்தான் ! எத்தனை குடும்பங்களை அழித்தான் ! எத்தனை குமரிகளின் வாழ்வைக் குலைத்தான் ! எவ்வளவு ஆணவத்தோடு வாழ்ந்தான் ! ' சக்ரவர்த்தியே நான் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து முடிப்பாரே, நீங்கள் என்ன அற்பப் பயல்கள் !" என்று எவ்வளவு திமிரோடு கூறினான், அன்று ! விருந்து மண்டபத்தில் ! பலர் முன்னிலையில் ! பாதிரியாம் பாதிரி, பாதகன் ! தூர்த்தன் ! வஞ்சகக்கள்ளன் ! காமி ! எண்ணற்ற இளம் பெண்களைக் கற்பழித்த கயவன் !...... அவனை நினைத்தாலே எனக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது தெரியுமா ?...........

" ஆத்திரம் அல்ல பாவ்லவிட்ச், அழுகையே வருகிறது எனக்கு ! இந்த ஒரு பாவியால் எத்தனை பெண்கள் கண்ணீர் உகுத்தனர் இந்த நாட்டில் ! எத்தனை கன்னியர்களின் வாழ்க்கை கசங்கிய மலராயிற்று ? விளக்கொளியில் மயங்கிய விட்டில் பூச்சிகளைப்போல் அல்லவா வட்டிளங் குமரிகள் இந்தக் கயவனின் மாயவலையிலே மளமளவென வந்து விழுந்தனர் ! புதிதாகத் திருமணமானபோது ஏற்படுவது போன்ற களிப்பும் குதூகலமும் அல்லவா அவர்களுக்கு ஏற்பட்டது அந்தக் கோமாளியின் ஆசிர்வாதம் பெற அவர்கள் நுழைந்த போது ! பிறகு அவன் அவர்கள் தூய்மையைக் கெடுத்த போது அனலிடைப் பட்ட புழு போல அல்லவா துடிதுடித்து விதிர் விதிர்த்து வெளியேறினர் !"

" பொரிச்கிவிட்ச் ! பொரிச்கிவிட்ச் ! இன்றொன்று தெரியுமா ? அந்த மாமிசப் பிண்டம் அப்போதுங்கூட உயிரோடிருந்தது !"

" பொய் ! பொய் ! உயிரோடாவது இருப்பதாவது ! நான் நம்பமாட்டேன் !"

"நீ மட்டுமா, யாருமேதான் நம்பமாட்டார்கள் ! பொடாசியம் சையனைட் என்ற கொடுமையான விஷத்தை நிறையக் கலந்து செய்த அந்த பிஸ்கட் துண்டுகளில் இரண்டே இரண்டு சாப்பிட்டால் போதும் எவரும் சுருண்டு விழுந்து மரண தேவதையிடம் அடைக்கலம் புகுந்து விடுவார்கள் ! ஆனால் அவன் எத்தனை பிஸ்கட்டுகளைத் தின்றான். செத்தானா ?"

" செத்தானவா ? அசையவே இல்லையே ! ஒரு துளி அவன் முகத்திலே மாற்றம் ஏற்பட வேண்டுமே ! கிடையவே கிடையாது !"

" பிஸ்கட் மட்டுமா, அதே விஷம் கலந்த 'ஒயின்' இரண்டு டம்ளர் குடித்தானே, மயக்கமாவது வந்ததா அவனுக்கு ? பிறகு, அந்த இளவரசன் யூசோபுவ் துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டானே, அப்போதுகூட அந்தப் பாதகன் தரையில் சாய்ந்தானே தவிர, செத்தானா ? செத்தான்—ஒழிந்தான் என்று சொல்லிக் கொண்டே நாம் அடுத்த அறைக்குப் போய் விருந்து சாப்பிடப் போனாமோ இல்லையோ, இரத்தம் சொட்டச் சொட்ட மாடிப் படிகளை இரண்டு தாண்டில் கடந்து தரையில் இறங்கி, தட தட வென்று. தோட்ட வாசற் பக்கம் ஓடினானா இல்லையா ?"

" இல்லையாவது ! நான்தானே சுட்டேன் அந்தச் சூதுமார்க்கனை அங்கு ? சுடவில்லையா ?"

" சுட்டாய் "

" ஒரு முறையா சுட்டேன் ?"

" அல்ல ! மூன்று முறை
டாய் ! அவன் மண்ணிலே
வரை சுட்டாய் ! சுட்
ஆனால்........."

" ஆனால் என்ன"

" ஆனாலும் அவன் உயிர்
பில்லை. இந்த முறை
போய்விட்டான் என்று
லோருமேதான் எண்ணி
ஆனால் அவன் சாகவில்லை.
'காரில்' அவனைத் தூக்கிப்
டுக் கொண்டு நான் போன
பிணத்தை நதியிலே தள்
வடலாம் என்ற எண்ண
தான் போனேன். அப்
யாரேனும் வந்து அந்தப்
கனுக்கு இன்னும் உயிர்
றது என்று சொல்லி இ
சொன்னவனை—அவன் எத்
மேதாவியாய் இருந்தாலும்
பித்தர் விடுதியில் தான் சேர்
பேன். ஆனால் இப்போது
சொல்கிறேன் அவன் அப்
பிணமல்ல என்று !"

" ஆனால் நீங்கள் பித்தரல்

" ஆம் ! பித்தனல்ல ! உ
யை உணர்ந்த எத்தன் !
ரம் சென்று, காரை நிறுத்தி
ஊன் டிரைவரும், கூட வந்த
வேலைக்காரனும், அந்தப்
தை—பிணம் என்று தான்
போது எண்ணியே—ஆற்
எறிவதற்காக காரிலிருந்து
போது, பிணம் திமிறிற்று,
ஓட. பயந்தே போய்விட்
அவர்கள் ! பிறகு அங்கே
பெரிய தூண் ஒன்றின் மீது
பேயன் உடலைமோதினர் பல
அப்போதுதான் மாண்ட
அவன் ! கல் உடல் அப்பா
னுக்கு கல் உடல் ! உருட்டி
உருளைக் கிழங்கு போல
இருந்தான் பார்த்தாயா
கொழுவென்று !"

" ஏன் இருக்கமாட்டான்,
விட்டுச், ஏன் இருக்க மாட்
ஊரார் உழைப்பை உறி
வாழ்ந்த மாமிசப் பிண்டம்
லவா அந்தப் பருத்த உடல் !

(11-ம் பக்கம் பார்க்க

ரஸ்புட்டீனின் லீலைகள்! ஆணவத் திருவிளையாடல்கள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

..ருப்பு கொஞ்சம் கொஞ்சமாக ..டக்குகிறது. கடைசி ஒளிச் ..டர்களும் மறைந்து விட்டன. ..ங்கும் இருள்கப்பிக் கொண்டது. ..றகு என்ன நடக்கிறது என்பது ..தளிவாகத் தெரிய வில்லை ..ளம் பெண்கள்.........முறுக்கு ..சை வாலிபர்கள்........... ..ந்த உருவம் அங்கும் ..ங்கும்...... ஐயையோ, போதும் போதும், சீ! சீ!, வேண்டாம் வேண்டாம்! அக்கிரமம்! முதலிய ..த்தங்கள்...... விம்மல்கள், அழு ..ரல்கள், திடீர் கூச்சல்கள்......

நீண்ட நேரத்திற்குப் பிறகு ..ந்த உருவம் பேசுகிறது—தெளி ..ான குரலில்—திட்டமான முறை ..ல்:

"மக்களே இவ்வளவு நேரம் ..வம் செய்தீர்கள்! பல அக்கிரம ..ான செயல்களில் ஈடுபட்டீர்கள்! ..செய்த பாவம் போதும்! உங்கள் ..ாவங்களை எல்லாம் நான் மன் ..னித்து விட்டேன். கர்த்தா அருள் ..ரிவார். போய் வாருங்கள்! போகு ..ன் ஏசுநாதர் திருப்பணியை மற ..ாதீர்கள்! பொருள் உதவி செய்து ..ட்டுப் போங்கள்!"

..ருழில்கள் (ரஷ்ய ராணயம்) ..விகின்றன; அந்த உருவத்தின் ..ங்கள் நிறையக் குவிகின்றன; ..மேலும் மேலும் குவிகின்றன......

ஆண்களும்பெண்களும் நாணத் ..ால் தலை குனிந்த வண்ணம் ..த்தம் இல்லம் நோக்கித் திரும்பு ..கின்றனர், அலங்கோலமான நிலை ..ல்! வெட்கத்தால் உடல் குறுகிப் ..பான நிலையில்! ஆனால் ஆண்ட ..ன் அருள் தமக்குக் கிட்டிவிட்ட ..தென்ற மகிழ்ச்சியோடு!

—ஒரு நாள் கூத்து முடிந்தது. ..ந்த உருவத்தின் அன்றைய திரு ..விளையாடல் தீர்ந்தது.

..பையில் பணம் திரண்டது—உட ..லும் இன்பம் சேர்ந்தது என்ற ..மகிழ்ச்சியோடு, உருவம், தன் ..ருப்பிடம் சென்றது.

* * *

..மோஉறுப்பினர் பொரிச்கிவிட்ச், ..மான் பாவ்லவிட்ச், இருவரும் எவனை பேயன் பாதகன் பாவி பழிகாரன் காமுகன் கள்ளன் காத கன் என்று தூற்றினரோ அவனே தான், ஆண்டவன் அருள் தனக்கு இருப்பதாகக் கூறி, குற்றமற்ற இளம் பெண்களையும் காளையரை யும் கெடுத்து, அந்தக் குமரிகளின் இளமையையும் கெடுத்த அந்த உருவம்.

கிரிகரி எபிமோவிட்ச் கிரிச்சா! அது அவன் சொந்தப் பெயர்! **ரஸ்புடீன்!** அது, அவன், அவனு டைய தந்தையாரிடமிருந்து கடன் வாங்கிக் கொண்ட "செல்லப் பெயர்!"

ரஸ்புடீன் என்றால் ஊழல் என்று பொருள், அகராதிப்படி. ஆனால் இன்று, வஞ்சகம்—காமம்—ஆண வம்—அக்ரமம்—அநீதி—அயோக் கியத்தனம்—கற்பழித்தல்--கயமை குரூரம்—ஊழல் இவ்வளவு தன்மை களையும் குறிப்பிடும் ஒரே ஒரு சொல், உலகத்தில் உள்ளது என் றால் அது ரஸ்புடீன் என்பதுதான்.

கிரிகரி எபிமோவிட்ச் கிரிச்சாவின் தகப்பன் ஊழலே உருவெடுத்த வன், குடியன், கயவாளித்தனத் தின் உறைவிடம், ஆகவேதான் அவனுடைய ஊரார் அவனுக்குப் பெயரிட்டனர் ரஸ்புடீன் என்று. அந்த செல்லப் பெயரைத் தனதாக் கிக் கொண்டான் கிரிச்சா. இன்று ரஸ்புடீன் என்றால் கிரிச்சாவைத் தான் குறிக்கும், கிரிச்சாவின் தகப் பனைக் குறிக்காது.

கிரிச்சா, முதலில் ஒரு சாதார ணக் குடியரானவன். குடிகாரன் கூட. யாரோ ஒரு அம்மையை மணந்தான். குதிரை வண்டி ஓட் டிக் காலந்தள்ளினான். குடித்துக் குடித்து, இருந்த சொத்தை யெல் லாம் தொலைத்துவிட்டு ஓட்டாண்டி யானான். ஆனால் குதிரை வண்டி யைமட்டும் விடவில்லை. குதிரை வண்டி ஓட்டி ஓட்டி அவன் சம்பா தித்த நாலுகாசுதான் சாந்தமே உருவான அவன் மனைவியையும் மக்களையும் காப்பாற்றிற்று.

கிரிச்சா குடியன் என்பது மட்டு மல்ல, இளமையிலிருந்தேகோணல் உள்ளம்படைத்தவன். அவன் சிறு வனாயிருந்தபோதே ஒரு நாள் ஒரு வயதும் நிரம்பாத பச்சிளம் குழந் தை ஒன்றை ஆற்றில் எறிந்து கொன்றான். காரணம், அது அவ னைக் கண்டதும் புன்சிரிப்புசெய்து வரவேற்காததுதான்! 14 வயதில் அவன் கிழவன் ஒருவனை அடித்து மிரட்டி அவன் பொருளைக் கொள் ளையிட்டான். மற்றொரு நாள் ஒரு கிழவியை அடித்து வீழ்த்தினான். குதிரைத் திருட்டு, கொள்ளை, பிறரை அடித்தல், கொலை முதலிய செயல்களை அவன் மாற்றி மாற்றிச் செய்து வந்தான். உள்ளூர் பஞ்சா யத்து ஒருமுறை அவன் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக 20 சவுக்கடி தண்டனை கொடுத்தது. என்றாலும் அவனுடைய வாழ்க் கையிலிருந்த கோணல் நிமிர வில்லை. அந்தக் கோணல் மேலும் மேலும் வளர்ந்தது.

அவனால் கோணலைநிமிர்த்த முடிய வில்லை. நிமிர்த்த வேண்டும் என்ற நினைப்புகூட அவனுக்குத் தோன்ற வில்லை. வாழ்க்கையில் உள்ள கோணலைநிமிர்த்தி அதை நேர்பெற நிலைநாட்டும் அளவுக்கு பண்பட்ட உள்ளம் உடையவனும் அல்ல அவன். கோணலை நிமிர்த்த நேர் மையான உள்ளம் வேண்டும் முதலில். ஆனால் நேர்மையோ ரஸ் புடீனின் நேர்பகைவன்.

ஊர்விட்டு ஊர் பயணம் போகும் போது, இடையே பயங்கரமான தோர் காட்டுவழி இருந்தால், சிலர் அதைக்கண்டதும், பாதையைச் செப்பனிட்டு, புதரையும் புற்றை யும் ஒழித்துக் கட்டி, வருவார் போவாருக்கு நலம்செய்ய எண்ணு வர். வேறு சிலர் உண்டு. அவர் கள் அந்த வழியில் சென்றால், "ஓகோ இது பயங்கரமான பாதை! இதுதான் நமக்கு ஏற்ற வழி. இப் படிப்பட்ட வழி இருந்தால்தான் பயணம் செய்வோர் திகைப்பர் வழி தெரியாமல். தடுமாடுவர். நமக்கு அவர்களை வழிப்பறி செய்ய வசதியாய் இருக்கும்" என்று எண்ணுவர்.

கிரிச்சா இந்த இரண்டாவது வரிசையைச் சேர்ந்தவன். ஆகவே தான் அவன் தன் வாழ்க்கையில் கோணல் இருக்கிறது என்று

கோணல் உள்ளம்—ரஸ்புட்டீனின் ஆயுதம்!

கண்டதும் அந்தக் கோணலை கிமிர்த்த எண்ணுது அந்தக் கோணலையே பிறரை ஏய்க்க உதவும் ஓர் ஆயுதமாகக் கொண்டான். தன்னுடைய கோணல் வாழ்க்கையை, ரஸ்புடீன்—இனி கிரிச்சாவை ரஸ்புடீன் என்றே அழைக்கலாம் — மிகத் தந்திரமானதோர் முறையினல் பளபளப்பு மிக்க வசீகர வாழ்க்கையாக மாற்றிக் கொண்டான். உலகம் அந்த பளபளப்பைக் கண்டது. ஏமாந்தது. அதைப் பாராட்டவும் தொடங்கிற்று. உள்ளே இருக்கும் வஞ்சகத்தை, நரிக்குணத்தை, குள்ள மனோபாவத்தை உலகம் அறியவில்லை. எப்படி அறியும்? பகட்டான உடை உடுத்திக் கொண்டால் கள்ள மார்க்கட் கழுகுகளைக் கூட கனவான்கள் என்றழைக்கும் உலகம்தானே இது?

நல்லபாம்பு பார்ப்பதற்கு மிக அழகாக, மினுமினுத்த மேனியோடு தான் உலவுகிறது. ஆனல் உள்ளே இருப்பதோ கொடிய நஞ்சு. இருந்தாலும உலகம் அதன் மேனி மினுக்கைக் கண்டு அதற்கு **நல்ல** பாம்பு என்று பெயர் சூட்டியதிலிருந்தே உலகம் அந்தப் பாம்பின் நச்சுப் பற்களை மறந்துவிட்டது. என்றுதானே பொருள்? இல்லையானல் உலகம் அதைக் கொடிய பாம்பு என்றல்லவா அழைத்திருக்கும்?

ரஸ்புட்டீன் முதலில் புலிபோல் சீறிப் பாய்ந்தான் உலகத்தின்மீது. உலகம் அவனுக்குச் சவுக்கடி தந்தது அப்போது. பிறகு ரஸ்புட்டீன் தன் போர்முறையை மாற்றிக் கொண்டான். நேர்முகத் தாக்குதலை நிறுத்தி இடுக்கித் தாக்குதலைத் தொடங்கினன். நல்ல பாம்பாக மாறினன்.

பாம்பின் மேல் தோல் கண்கவர் வனப்பினதாய் இருக்கக் கண்டு ஏமாந்தது உலகம். உள்ளிருக்கும் விஷத்தை மறந்தது. ரஸ்புட்டீனைப் போற்றிப் புகழத் தொடங்கிற்று.

குதிரைவண்டிக்காரனுய் இருந்து, கிரிச்சா கொள்ளை கொலை திருட்டு இவற்றை நடத்தியபோது, உலகம் சீறிற்று அவனைக் கண்டு. அதே கிரிச்சா பாதிரி வேடம் பூண்டு, கையில் விவிலிய நூலை ஏந்திக் கொண்டு, அதே தொழில்களை, நாகரிகமான முறையில் செய்தபோது, முன்னே சீறிவிழுந்த அதே உலகம், அவன் காலடியில் வந்து நின்று அந்த அழுக்குப் பாதங்களை முத்தமிட்டது!

ரஸ்புட்டீன் திடீரென ஒரு நாள் மடம் ஒன்றிற்குச் சென்ருன். இரண்டு வாரங்கள் தங்கினன். பிறகு திரும்பினன் ஊருக்கு. "நான் ஞானஸ்னனம் பெற்று விட்டேன்" என்ருன். "என் கனவில் கர்த்தா தோன்றினர். என்னைப் புனிதனுக்கினர். என் உடலைத் தடவிக் கொடுத்தார். அது தெய்வீக ஒளி பெற்றது. உடனே கர்த்தர் என்னைப் பார்த்து அர்ச். மைகேல் சர்ச் ஒன்று கட்ட வேண்டும் என்று ஆணையிட்டு மறைந்தார்" என்று கூறினன் ஒரு கதையை. உலகம் நம்பிற்று. ரூபில்கள் (ரஷ்ய ரூபாய்) ரஷ்யா எங்கணுமிருந்து உருண்டோடி வந்தன ரஸ்புடீனின் இல்லத்திற்கு.

ரஸ்புட்டீன் ஆண்டிவேடம் பூண்டான். காடு மேடுகளிலும் மலைப் புறங்களிலும் ஆற்றோரங்களிலும் சமவெளிகளிலும் அலைந்து திரிந்தான். கிராமம் கிராமமாகச் சென்ருன். கன்னி மேரியைப் பற்றியும் ஏசுநாதர் பற்றியும் அர்ச்-மைகேல் பற்றியும் அர்ச். பால் பற்றியும் யாருக்கும் புரியாத பிரசங்கமாரி பொழிந்தான். அடிக்கடி, பலர் முன்னிலையில், கர்த்தாவே — என்னை மன்னியுங்கள் என்று கண்ணீர் விட்டுக் கலங்கி நின்ருன். மாஸ்கோ, கீவ், காசான் முதலிய பல பகுதிகளுக்கும் சென்ருன். செல்லும் இடமெல்லாம் மக்கள் திரள் திரளாய்த் திரண்டு குழுமினர். அவன் பின்னே சென்றனர். கிறித்தவ மடங்களெல்லாம்கூட அவனை 'இரு கையேந்தி' வரவேற்றன. ரஸ்புட்டீன் "கட்ட இருக்கும்" மைக்கேல் சர்ச்சிற்கு பணம் ஏராளமாய்த் திரண்டது.

ஊருக்குத் திரும்பியதும் ரஸ்புட்டீன் தன் இல்லத்தையும் மனைவி மக்களையும் விட்டு விலகி, தனியாக ஒரு சிறு குடிசை அமைத்து கொண்டு அங்கே துறவு வாழ்க்[கை] வாழத் தொடங்கினன்.

ரஸ்புட்டீன் புகழ் விரைவில் ர[ஷ்]யாவின் மூலை முடுக்குகளில் எ[ல்]லாம்கூட பரவத் தொடங்கிற்[று] எங்கெங்கிருந்தும் மக்கள் கும்ப[ல்] கும்பலாக ரஸ்புடீன் ஆஸ்ர[மத்]திற்கு வரலாயினர். ஆண்களு[ம்] பெண்களும் பாபிகளும் புண்ய[ாத்]மாக்களும் படித்தவர்களும் பா[மர]ரும் இந்த "மகானின்" அரு[ள்] பெறவேண்டி ஓடோடிவந்தன[ர்]. ஆருடம் கேட்பவரும் எதிர்கா[ல] பலன் கேட்பவரும் எந்நேர[மு]ம் ரஸ்புட்டீனைச் சூழ்ந்து நின்றன[ர்]. குழந்தை பிறக்குமா என்று கே[ட்]கிற மலடி, புதுக்கடை வை[க்க] எது சரியான நேரம் என்று அறி[ய] விரும்பும் வணிகன், அப்ப[ா] பிழைப்பாரா என்று கேட்[கும்] மகன், திருமணம் நடக்குமா [...] எப்பொழுது என்று வினவு[ம்] காளை, எலும்புருக்கி நோ[யைத்] தொலைய வழி உண்டா என்[று] கேட்கும் நோயாளி, பல்வேறு [...]யினர், ரஸ்புட்டீனின் 'ஒரு வா[ர்த்]தை'யை எதிர்நோக்கி இராப்[பக]லாகத் தவங் கிடக்கத் தொட[ங்]கினர்.

திடீரென ஓர் நாள், செயின்[ட்] மைக்கேல் என்னை அழைக்கிற[ார்] என்று சொல்லிவிட்டு ரஸ்புட[்டீன்] வேற்றூர் சென்ருன். ஒரு மா[தத்]திற்குப் பின் திரும்பினன்.

"இப்போது கர்த்தாவினுடை[ய] சர்வ வல்லமை பொருந்திய சக்[தி]யில் ஒரு பகுதி கர்த்தாவா[ல்] எனக்கு அருளப்பட்டிருக்கிற[து]. இனி நான் எந்த ஆத்மாவினுடை[ய] பாவத்தையும் போக்க முடியு[ம்]. செயின்ட் மைக்கேல் எனக்[கு] பல இரகசிய தத்துவங்கள[ைச்] சொல்லி இருக்கிருர். ஆக[வே] எவரும் எத்தகைய பாவம் செ[ய்]திருந்தாலும் இனி அஞ்சவேண்டி[ய]தில்லை — எல்லாப் பாபிகளை[யும்] மன்னிக்கும் சக்தி எனக்குண்[டு]" என்று ரஸ்புட்டீன் திரும்பி வ[ந்]தும் அறிவித்தான். பாவங்க[ளை] மன்னிக்கும் சக்தி தனக்கு இரு[க்]கிறது என்று சொன்னதே

அணங்குகளின் அழுகுரல்! பாதகன் பவனி!

வன் நிற்கவில்லை. "மோட்சம் வண்டுமானால் பாவம் செய்யுங் ள்" என்ற அதிசய தத்துவம் ன்றையும் அவன் கண்டு பிடித் ன். நிறைய பாவம் செய்யுங் ள்—அப்போதுதான் கர்த்தர் ருள் எளிதில் கிட்டும் என்று றினான்.

ஏராளமானவர்கட்கு இந்தத் த்துவம் மிக இனித்தது. அணி ணியாக வந்தனர் ரஸ்புட்டினின் ருப்பிடம் நோக்கி. இளங் குமரி ளையும் குமரர்களையுமே அவன் ரும்பினான். அதிலும் குறிப்பாக ழகிய கன்னிப் பெண்களே ஸ்புட்டினின் பாவ மன்னிப்புத் ட்டத்தில் முதல் இடம் பெற்ற ர். மற்றையவர்களைவிட கன் ப் பெண்களே அதிகப் பாவம் ய்ய இடம் இருக்கிறது என்றும் கவே அவர்களே எளிதில் மோட் ம் பெறல் ஆகுமென்றும் கூறி ன் ரஸ்புட்டின்!

ாடெங்குமிருந்து தன்னைத் டிவந்த இள மங்கையரையும் லிபர்களையும் ஓர் நள்ளிரவில் க்காட்டில் வரவழைத்து, கட் ரத் துவக்கத்தில் கூறிய திரு ளையாடலை நாள்தோறும் விடா ல் நிகழ்த்தி வந்தான் ரஸ்புட்டின். வன் காமப் பசியைத் தணித் க்கொள்ள, இந்த வழி, தந்திர னதோர் சூழ்ச்சிப் பொறியாக மைந்தது. இந்தச் சூது தெரி து, நூற்றுக் கணக்கான குமரி ர், மூட நம்பிக்கை என்ற வழுக் ப் பாலத்தை நம்பி நடந்து, ரஸ் டின் அமைத்த பலிபீடத்தில் க்கி வீழ்ந்தனர். வீழ்ந்த கே அவர்கட்குத் தெரிந்தது இறையருள் பெற்றவனின் ப்பிடமல்ல — காமாந்தகாரக் ளன் ஒருவனின் இருட்டுக் க என்பது. தெரிந்தது; ல் தெரியுமுன்னமே அவர்க டைய இளமை, அழகு, இன்பம் போய்விட்டது. அவர்கள் ழுகுரல் எழுப்பினர். ஆனால் த அழுகுரலை அடக்கிக் ாண்டெழுந்தது, மக்கள் ரங்கும் ரஸ்புட்டினைப் போற் பாடிய பாசுரங்களின் ஓசை!

பாதிரி உருவில் உலவிய அந்தப் பாதகன் ரஸ்புட்டின் இவர்களின் அழுகுரலை அணுவளவும் பொருட் படுத்தவில்லை. சீமான் வீட்டுச் சிங்காரிகள் அவன் காலடியிற் கிடந்த நேரம் அது. அவர்களின் சதங்கை ஒலியையே கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டுப்போன அவன் செவிகளில் அவனாலேயே தம் தூய்மையை இழந்த மான்விழி மாதராரின் விம்மல் ஒலி புகாததில் வியப்பேது?

நாளுக்கு நாள் ரஸ்புட்டினின் செல்வாக்கு வளர்ந்தது. அவனுடைய் புகழ் மண் குடிசைகளிலிருந்து மாட மாளிகைகளைத் தாவிற்று. அவனுடைய தத்துவங்கள் கட்டைவெட்டிகளிடமிருந்தும் குப்பை கூட்டுவோரிடமிருந்தும் புறப்பட்டு படைத் தளபதிகளிடமும் பாராளும் அமைச்சர்களிடமும் பவனி வரத் தொடங்கின. அவனுக்குப் பாராட்டும் புகழ் மாலையும் சேரிகளிலிருந்துமட்டுமல்ல பிரபுக்களின் அரண்மனைத் தோட்டங்களிலிருந்தும் வந்து குவியலாயின. ஜார் மன்னன் அரண்மனையாகட்டும், மாஸ்கோ நகர வீதிகளாகட்டும், கிரம்ளின் கோட்டைகளாகட்டும், கீவ் நகர மாளிகைகளாகட்டும், மந்திரிமார்களின் வெல்வெட் மெத்தை ஆகட்டும், டூமா மன்றம் ஆகட்டும், ரஸ்புட்டினின் செல்வாக்கு பரவாத இடமில்லை. அவன் பெயர் கேளாத ரஷ்யர் இல்லை. அவனுக்கு வணக்கம் செய்யாத தலைகள் இல்லை. ரஸ்புட்டின், நாட்டுப்புற வாசத்தை விட்டு தலைநகருக்குள் நுழைந்தான்—பரிவாரங்கள் புடை சூழ. அவன் வருகையைப் பற்றி பத்திரிகைகள் முரசறைந்தன. மடாலயங்கள் மணியடித்தான். மக்கள் ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டார்கள். பாதிரிகள் நல்வரவேற்புக் கூறினார்கள். பெரியபெரிய பிஷப்புகள் அவன் முன் தலை தாழ்த்தி கரங்குவித்து, அடங்கி ஒடுங்கி நின்றனர். அமைச்சர்கள் பராக்குக் கூறினர். பிரதானிகள் ஸ்தானாதிபதிகள், தளபதிகள், சீமான்கள் யாவரும் 'லாலி' பாடினர். 'தெய்வீக மகான் வந்தார்-வந்தார்'' என்று பட்டினம் முழுவதும் குதூகலத்தோடு பேசப்பட்டது.

செயின்ட் பீடர்ஸ் பர்க்கில் (இப்போதைய லெனின் கிராடில்) ரஸ்புடின் தங்கிய வீட்டிற்கு ரஷ்யப் பிரமுகர்கள் அனைவரும் வந்து வந்து போகலாயினர். விரைவில் ஜார் அரண்மனைக்கும் ரஸ்புட்டினின் புகழ் எட்டிற்று. ஜார் மனைவி—சக்ரவர்த்தினி அலெக்சாண்ட்ரா பியோடராவ்னாவும், அவள் தோழி அன்னா விரூபோவாவும் ரஸ்புட்டினின் பாவ மன்னிப்புச் சூதாட்டத்திற் சிக்கினர். அன்னா விரூபோவா, ரஸ்புடினின் பிரதம "சிஷ்யை" ஆனாள். சக்ரவர்த்தினியோ ரஸ்புட்டினிடம் நீங்காத "நேசம்" கொண்டாள். பிறகு என்ன? ரஷ்யாவில் ரஸ்புட்டின் இட்டது சட்டம் என்பதைச் சொல்லவா வேண்டும்?

ஜார் 'ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடிற்று ரஷ்யா. அந்தக் கொடுங்கோலன் ஜார் மன்னனோ ராணி அலெக்சாண்ட்ரா சொன்னபடி கேட்டுவந்தான். ராணி அலெக்சாண்ட்ராவோ ரஸ்புடினின் உள்ளங்கையில் அடக்கம். ஆக, ரஷ்யா, ரஸ்புடினின் ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு கட்டளையாகக்கொண்டு உடனே நிறைவேற்றிவைக்கும் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது.

* * *

அன்பரே,

வாருங்கள். வாருங்கள். உடனே வாருங்கள். நீங்கள் இவ்வளவு தொலைவில் இருக்கிறீர்கள் என்பதை நினைக்க நினைக்க என் உள்ளம் வெடித்து விடும்போல் இருக்கிறது. உங்கள் கைகளை என் கைகளிலே கோர்த்துக் கொண்டு, உங்கள் கண்களில் என் ஆத்ம ஜோதியைக் காணும் அந்த இன்பத்தை நான் எத்தனை நாட்களுக்கு மறந்திருப்பது? தங்களைப் பிரிந்து ஒரு கணமும் போக்க என்னால் முடியவில்லை. ஆகவே வந்து விடுங்கள்; வந்துவிடுங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

17—4—48 சனிக்கிழமை

ஸ்பென்சர் ஓட்டலில்

சாம்பார் சாதம்!

1948, 1894 அல்ல! 1894, 1948ம் அல்ல. இதை சென்னை ஸ்பென்சர் கம்பெனியார் நன்குணர்ந்திருக்கின்றனர். ஆனால் ஓமாந்தூர் சர்க்கார் இதை உணர மறுக்கிறது.

ஸ்பென்சர் ஓட்டல் ஆங்கிலேயர் உண்பதற்காக ஆங்கிலேயரால் நடத்தப்பட்டுவரும் ஓர் ஆங்கிலேய உணவு விடுதி. அங்கே ரொட்டியும் வெண்ணெயும் மட்டுமே கிடைத்துவந்தது இதுவரை-இட்லி தோசை சாம்பார் கிடைப்பதில்லை. ஏனெனில் ஆங்கிலேயர் உணவு விடுதியில் இவை தேவையில்லை.

ஆனால் இப்போதோ காலம் மாறிவிட்டது. இந்தியத் துணைக் கண்டத்தின்மீது படர்ந்திருந்த வெள்ளையர் ஆட்சியும் அகன்றுவிட்டது. இங்கே தங்கியிருந்த பல சீமைத் துரைகள் தத்தம் மூட்டை முடிச்சுகளோடு கப்பலேறி அக்கரை சென்றுவிட்டனர்.

சென்று விட்டனர்! எனவே தான் ஸ்பென்சர் ஓட்டல்காரர்கள் சாம்பார் சாதம் விற்கத் தொடங்கிவிட்டனர். இனி தென்னாட்டவருக்குத்தானே — இங்கிருப்பவர்கட்குத் தானே அவர்கள் உணவு 'பரிமாற' முடியும்! எனவேதான் வெண்ணெயும் ரொட்டியும் இருந்த இடத்தில் சாம்பார் சாதம் நுழைகின்றது; 'ப்ளேட்'டும் 'ஸ்பூ'னும் நடமாடிய மேசைமீது வாழை இலையும் குழம்புக் கிண்ணமும் வந்து வந்து போகின்றன; ஆங்கில உணவு மறைந்திட, தென்னாட்டு உணவு, தன் தோற்றம் காட்டி நகைமுகம் செய்கிறது!

1894ல் ஸ்பென்சர் ஓட்டல் வெள்ளையர் உணவைப் பரிமாறத் தொடங்கிற்று. 1948ல் சாம்பார் சாதத்தைப் பரிமாறத் தொடங்குகிறது. காரணம், நாம் முன்னரே கூறியதுபோல, 1948, 1894 அல்ல என்பதுதான்.

ஸ்பென்சர் கம்பெனியாருக்குப் புரிந்த இந்தச் சாதாரண உண்மை கூட சென்னை தேசீய மந்திரி சபைக்குத் தெரியவில்லை. தெரியவில்லை என்பது கண்டு அவர்கள் வெட்கப்படவுமில்லை. வெட்கப்படாதது மட்டுமல்ல, பெருமைகூட அடைகிறார்கள்.

விண்ணிலே, 'பறக்கும் கோட்டைகள்' வட்டமிடும் இந்நாளில், அவர்கள், கட்டை வண்டியிலே 'கனவேகத்திலே' சவாரி செய்கிறார்கள்.

மின்சார விளக்குகள் நாடெங்கும் ஒளி வீசும் இந்நாளில், அவர்கள், குத்துவிளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு, அதற்கு எண்ணெயும் திரியும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

அணுக்குண்டுகள் யாரிடம் அதிகம்—ரஷ்யாவிடமா அமெரிக்காவிடமா என்று அரசியல் ஜோதிடர்கள் ஆருடம் கணிக்கும் இக்காலத்தில், அவர்கள், வேலும் வில்லும் கத்தியும் கேடயமும் தேவை
தேவை என முழங்குகிறார்கள்.

இருபதாண்டுகளுக்கு, மை, பு
தாக வேண்டாமலே எழுது
பேனா, மையே தேவையில்லா
பேனா, தானே மை தேடிக் கொ
ளும் பேனா என்று இப்படி புது
புது பேனாக்கள் நாள்தோறும் பு
பட்டவண்ணம் இருக்கும் இ
காலத்தில் அவர்கள், ஏடும் எழு
தாணியும் எங்கே கிடைக்கும் எ
அலைந்து திரிகிறார்கள்!

ஆம், சென்னை சர்க்கார் இ
தகைய பத்தாம் பசலிப் போ
குடன்தான் நடந்து கொள்கிற
கள். அணுக்குண்டு காலத்
ஆமைகள் போலும் சர்க்கா
உறுப்பினர்கள்!

பல கோயில்கள் குட்டிக்குபேர
களின் அரண்மனைகள் என உ
ளன இந்நாட்டில். அங்குள்ள செ
வமோ பிர்லாக்களையும் விலைக்
வாங்கும் அளவு உண்டு. மது
மீனாட்சியும், திருச்சி அரங்கநாத
சிதம்பரத்து நடராசரும், கா
வெங்கடேசரும், மயிலை கபாலி
ரும், அங்கங்கே உள்ள அவர்க
டைய மற்ற மற்ற உறவின் மு
யாரும் ஏராளமான சொத்துக்க
இருட்டறையில் முடக்கிக் கொ
டுள்ளனர். அவற்றில் ஒரு பகு
யையேனும் நாட்டின் தொழி
வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்
கைத் தர உயர்விற்கும், ஏ
களின் பசிப்பிணி நீக்கத்திற்கு
பயன்படுத்தலாம் — பயன் படுத்
வேண்டும்—பயன் படுத்துவ
முறை என்பது நாட்டில் உள்
நல்லறிவாளர்கள் அனைவருடை
கருத்து.

பம்பாய் சர்க்கார் அண்
யில் இந்துமத அற நிலையங்களி
ஆய்வுக் குழு ஒன்று அமைத்துள்
ளார். அதன் முக்கியமான நோ
கங்களில் ஒன்று பம்பாய் கோயி
களில் முடங்கிக் கிடக்கும் ...
கோடி ரூபாய் பெறுமான சொ
துக்களை எப்படி நாட்டின் ம
மலர்ச்சிக்குப் பயன்படுத்துவ
என்பதே என்று அக் குழுவி
தலைவர் **தெண்டோல்கார்** அ
களே குறிப்பிட்டுள்ளார்கள்.

நாடும் மக்களும் வாழவேண்
என்ற நன்னோக்கம் படைத்த
லறிவாளர்கள் எந்தத் திக்கு நோ
கிச் செல்கின்றனர் என்பத
தெண்டோல்கார் அறிக்கை
எடுத்துக்காட்டு. கோயில் சொத்

"கோயில் பூனை"களே முற்றி
உண்டு கொழுக்கவிடாமல்
ற்றை சமுதாயம் தழைக்கவும்,
வு வளரவும், மக்கள் வாழ்வு
வும் ஏற்ற வழி துலறகளிற்
விடுவதே—செலவிடும்படி
வதே இன்றைய நாகரிக
கார்களின் கடமை.

லுல் எக் காரணத்தாலோ
ன்னை அரசியலார் இதைச்
யவில்லை. செய்யாததோடு,
படியெல்லாம் செய்யவேண்
என்று கூறும் அறிஞர்களை
யாண்டி செய்வதுபோல—
க்குண்டு காலத்தில் அம்பருத்
தேடுவார் போல—விஞ்
சகாப்தத்தில் அகல் விளக்
அலைவார்போல—இயந்திர
ச்சி மிக்க இந் நாளில் கை
டை சுழற்றுவார்போல—கை
த டாக்டர்களை ஒதுக்கித்
விட்டு மந்திரவாதிகளிடம்
ந்துக்குப் போவார்போல,
னை சர்க்கார், உளுத்துப்
ன சில உதவாக்கரைத் திட்டங்
உருவாக்கி இருக்கின்றனர்.

து கோயில்களில் பிற மதத்
நுழையக்கூடாது—சட்டை
ட்டுக்கொண்டு உள்ளே செல்
டாது—செருப்பு காலில்
ந்தால் உள்ளே நுழையக்
து—வழிபாடு தவிர, கோயில்
அறிவு வளர்ச்சிக்கான
துள்ள காரியங்கள் எதுவும்
த்தக்கூடாது—பழக்க வழக்
ற்கு மாருக இம்மியும் பிறழக்
து-மக்களின் வசதியையோ
மையையோ முன்னிட்டுக்கூட
பாட்டு நேரம் முறை முதலிய
ற மாற்றக்கூடாது—நாட்டு
ழிக்கும் வழிபாட்டு மொழிக்
தொடர்பே இல்லாமல் இருந்
க்கூட செத்த மொழியிலேயே
கங்கள் கூறுவதை மாற்றி
லோ தெலுங்கிலோ கூறக்
து என்பன போன்ற
து' கூச்சல்களை ஓர் அறிக்
க்கி அதன் மீது பழக்க வழக்
ன்னும் அடிமை முத்திரை
பொறித்து, சென்னை சர்க்
தம் 'சீல்' போட்ட கவரில்.
மடித்துவைத்து, மக்களுக்
ருகின்றனர் — தைரியமாக!
ச்சலாக! நடப்பது 1948
து நினைவிலே இருந்துங்கூட!
டங்கும், கோயில் உடமை
மக்களிடம் தரப்படவேண்
மதத்தின் பெயரைச்சொல்லி
வாழும் மதோன்மத்தரிடம் இனி ஒரு கணமும் இருக்கல் ஆகாது என்ற உரிமை முழக்கம் எழுந்துவிட்ட இந்நாளில் சென்னை சர்க்கார் சட்டை போடலாமா—செருப்பு போடலாமா என்பது போன்ற "சில்லுண்டிப் பிரச்சினை"களில் தம் நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டிருப்பது மன்னிக்கமுடியாத குற்றம் மட்டுமல்ல, மக்களுக்கு அவர்கள் செய்யும் மாபெருந் துரோகமுங்கூட.

ஸ்பென்சர் ஓட்டல், சர்க்கார் மாளிகைக்கு வெகு அருகில்தான் இருக்கிறது. என்றாலுங்கூட காலம் மாறுகிறது—மக்கள் கருத்தும் மாறுகிறது — ஆகவே நம் நடைமுறையும் மாறவேண்டும் என்ற அடிப்படை உண்மையை அவர்கள் உணர்ந்த அளவுகூட நம் சர்க்கார் உணராதது நம் உள்ளத்தில் வியப்புணர்ச்சியை மட்டுமல்ல, இப்படிப்பட்ட சர்க்காரால் நாம் ஆளப்படுகிறோமே என்ற வெட்க உணர்ச்சியையும் உண்டாக்குகிறது.

ஸ்பென்சர் ஓட்டலில் சாம்பார் சாதம்!—அது, கால மாறுதலை அந்த ஓட்டல்காரர்கள் உணர்ந்ததன் அறிகுறி.

கோயில் பெருச்சாளிகளின் கொட்டம் அடங்க வழிதேடாது, செருப்பிலே சிந்தை செலுத்தும் சென்னை சர்க்கார் அறிக்கை!—இது, காட்டுமிராண்டிக் காலத்துக் கை ராட்டையை சுழற்றிய பழக்கம் இன்னும் இவர்களை விட்டு அகலவில்லை என்பதற்கு ஓர் அரிய எடுத்துக்காட்டு!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சன் யூசுபோவ் ரஸ்புடீனை விருந்துக்கு அழைத்தான். விருந்தின் போது கரலி வருவாள் என்றும் ரஸ்புடீன் அங்கு அவளைக் காணலாம் என்றும் கூறி வைத்தான். கரலியின் மீது வஞ்சந்தீர்த்துக்கொள்ள ஆசையோடு வந்தான் ரஸ்புட்டீன். வந்த இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

"சுட்டுக் கொல்லப்பட்டானா என் சுகுமாரன்" என்று கதறிக் கதறி அழுதாள் ஜார் வேந்தன் மனைவி. ஜார் மன்னனும் கலங்கினன் அருமை ரஸ்புடீன் மாண்டானே என்று. ஆனல் ரஷ்யா களித்தது. அந்தத் தூர்த்தனின் துர்நடத்தையால் தம் வாழ்க்கையை வறண்ட பாலையாக்கிக்கொண்ட ஆயிரம் ஆயிரம் கன்னியர்கள் களித்தனர், அந்த ஆணவம் பிடித்த காமுகக் கயவனின் பாவ மன்னிப்புப் பொறியில் சிக்கிய அத்தனை பேரும் கூவிக் கூவிக் களித்தனர்.

ரஷ்யர் யாவரும் களிப்புச் சிந்து பாடினர் பாதகன் ரஸ்புடீனின் மரணச் சேதி கேட்டு.

ஜார் குடும்பம் மட்டும் துக்கபுரிப் பயணம் செய்தது.

ரஷ்யர் களித்தனர்—காரணம், ரஸ்புடீன் மற்ளுெரு ஜார் என வாழ்ந்தான், மமதையின் வடிவமாக! ஆணவத்தின் அழியாத உருவமாக! மக்களை வதைக்கும் மாபாதகனாக! ஜார் கூட அவ்வளவு கொடியவனாகத் தோன்றவில்லை ரஷ்யர் கண்களுக்கு. ஏனெனில் அவனுடைய ஆதிக்கம் "இந்த உலகத்தோடு" முடிந்து விட்டது! ஆனல் ரஸ்புட்டீன்! பரமண்டல பிதாவையே தன் துணைக்கு அழைத்துக்கொண்டல்லவா ரஷ்ய மக்களை மிரட்டி வந்தான்! ஜார் மன்னனின் மணி முடியை விட ரஸ்புடீனின் ஜபமாலையைக் கண்டுதான் ரஷ்யர்கள் அதிகம் நடுங்கினர். அந்த ஜபமாலை தம் கண் எதிரே அறுந்து விழக் கண்டால் களிப்பு பிறக்காதா ரஷ்யர் உள்ளங்களில்? பிறந்தது. களித்தனர்.

ஆனல் ஜார் வருந்தினன். அவலக் குரல் எழுப்பினன். சோகமே உருவாகிக் 'கல்லாய்ச் சமைந்தான்! அதற்கும் காரணம் இருக்கிறது. ரஸ்புடீனின் வீழ்ச்சி தன் ஆதிக்கத்திற்கு வீழ்ச்சி என்று அவன் எண்ணினன். ஆகவேதான் அவன் அவ்வளவு வருந்தினன்.

ஜார் மன்னன் எண்ணம் தவறானதுமல்ல. ரஸ்புடீனின் வீழ்ச்சி ரஷ்யப் புரட்சியின் துவக்கம் என்று கூறினல் அதில் அதிகத் தப்பிருக்க முடியாது.

ஜார் சில மாதங்களுக்குப் பின் சாய்ந்தான் மண்மீது! ரஸ்புடீன் அதை ஜாருக்கு முன்கூட்டியே அறிவிப்பான் போல வீழ்ந்தான் முன்னதாக. மதத்தின் பேரால் நடைபெறும் அக்கிரமம் தொலைந்தாலொழிய பொருளாதார சமுதாய விடுதலைகள் தோன்றமாட்டா என்பதற்கு ஓர் அறிகுறிபோல் அமைந்தது ரஸ்புடீன் வீழ்ச்சி!

ரஸ்புட்டீன்—சவக்குழி நோக்கி!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் இங்கிருந்து போனதிலிருந்து இங்கே 'வெறிச்' சென்றிருக்கிறது. இனி என்னை ஒரு மணி நேரம் கூட தனித்திருக்க விடாதீர்கள். இனி நாம் எப்போதும் பிரிய வேண்டி இரா—துஇருக்கக்கூடாது இங்கே, நான், நம் இருவரும் ஒன்றாகவே இருக்க அருள் பாலிக்க வேண்டும் என்று ஆண்டவனை தினந்தோறும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

உங்கள் அருமைப்பெண்

....

* * *

ரஸ்புடீன் தலைநகரை விட்டு வெளியே இருக்க நேர்ந்த ஒரு சமயம், ராணி, ரஸ்புடீனுக்கு எழுதிய கடிதம் இது. ரஸ்புடீனுக்கு ராணியிடம் இருந்த செல்வாக்குக்கு இதைவிடச் சான்று வேறு தேவையே இல்லை.

1914-ல் உலகப் போர் தொடங்கிற்று. ரஸ்புட்டீன் செல்வாக்கு உச்ச நிலைக்கு வந்தது. படைத் தளபதிகள் அவன் சொற்படி நடந்தனர். பிரதம மந்திரியும் பிறரும் அவன் மாளிகைத் தலைவாயிலிற் காத்துக் கிடந்தனர் அவனுடைய கட்டளைகளைப்பெற.

ரஸ்புடீன், ஒரு நாள், தன் நண்பனை ஒருதோட்டக்காரனை திடீரென 'பிஷப்' ஆக்கினான்.

மற்றொரு நாள், இருக்கிற உள்நாட்டு மந்திரியைத் தள்ளிவிட்டு தன் சொற்படி கேட்கும் க்வாஸ்டாவ் என்பவனை அமைச்சர் ஆக்கினான்.

இன்னொரு நாள், தன்னைப் புகழ்ந்து பாடிய யாரோ ஒரு வழிப்போக்கனுக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் வேலை கொடு என அந்த மந்திரிக்கு ஆணையிட்டான்.

அந்த மந்திரி அவ்வளவு கோமாளித்தனமாக நடந்துகொள்ள மறுத்தபோது ரஸ்புடீன் அவனை வேலையிலிருந்து தள்ளினான்.

தன் கைப்பாவையான ஸ்டர்மர் என்பவனையே உள் நாட்டமைச்சராக்கினார்.

அவனையே பிரதமராகவும் ஆக்கினான்.

திடீரென ஒரு நாள் பிரதம சேனாதிபதியின் பாசறைக்குச் சென்று, "ஜெர்மனிமீது ரஷ்யா சார்பில் தொடுக்கப்பட்டுள்ள போரை நிறுத்து—இது கர்த்தர், கனவில் தோன்றி, எனக்கிட்ட கட்டளை" என்றான்.

சேனாதிபதி மறுத்தபோது அவரை வேலையினின்று தள்ளினான்.

இவ்வாறு ரஸ்புடீன் நினைத்ததை நினைத்தபடி சாதித்து வந்தான். அவன் எண்ணியதை எண்ணியபடி முடிக்க ஆட்கள் ஆயிரம் ஆயிரம் என ஓடிவந்தனர்.

ரஷ்யாவில் அன்று ரஸ்புட்டீனுக்கிருந்த செல்வாக்கு வேறு எவருக்கும் இல்லை. ஆனாலும் அந்த செல்வாக்கு அவனை அறியாமலே சரிந்துகொண்டிருந்தது.

பாவ மன்னிப்பு என்ற பெயரில் அவன் நடத்திவந்த அக்கிரமங்கள் நாடெங்கும் அவனுக்கு விரோதிகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

அவனால் தம் கற்பிழக்க நேர்ந்த இளம் பெண்கள் சிந்திய கண்ணீர் "பழிக்குப் பழி கொடடா பாதகப் பாதிரீ!" என்று வஞ்சினம் கூறிக்கொண்டிருந்தது.

அவன் ஆற்றிய பல ஆணவச் செயல்கள், "ரஸ்புடீனைத் தொலைப்பதே இனி வேலை" என்று சூளுரைக்கும் தீரர்களை, அங்கங்கே உருவாக்கிக்கொண்டிருந்தது.

அழிவுகாலம் ரஸ்புடீனை நோக்கி வெகு வேகமாக வந்துகொண்டிருந்தது! அல்ல! தவறு! ரஸ்புடீன் தன் சவக்குழி நோக்கி வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தான்.

கரலி, அன்றைய ரஷ்யாவின் தலைசிறந்த நடனமாது! ஓர் இரவு, அவள் காரில் பெட்ரோல் இல்லாத காரணத்தால், தெருவில் நடந்து போய்க்கொண்டிருந்தாள். ரஸ்புடீன் கண்டான் அந்த அழகிய சிலைபோன்றாளை. எத்தனையோ இளம் பெண்களிடம் அவன் காட்டிய அந்தப் பாவ மன்னிப்பு வித்தை அவளிடமும் பலிக்கும் என எண்ணி நெருங்கினான்! அவள் எச்சரித்தாள்!

"நான் ரஸ்புடீன், தெரியுமா!"

"தெரியும்! தூர நில்."

"நான் விரலை அசைத்தா
ரஷ்யா அசையும்."

"இருக்கலாம். ஆனால் எ
விரல் அசைந்தால் உம் உயி
அசையும்."

"வேண்டாம் வீண் பேச்
என்னிடம் ஆண்டவன் அருள
தெய்வீக சக்தி குடிகொண்டி
கிறது."

"என்னிடம் அதைவிட வ
நடன சக்தி இருக்கிறது."

"உன் பாவங்களை மன்னிக்
ஆற்றல் எனக்குண்டு."

"நான் பாவி அல்ல உங்க
மிருந்து மன்னிப்பு பெற."

"என்ன கரலி, அதிகம் பே
றாய்? என் அருகே
கண்ணே!"

"நாவை அடக்கிப்பேச
இல்லையேல் உம்மை அட
எனக்கு வழி தெரியும்."

கரலி, கடைசி வார்த்தை
கூறி முடிப்பதற்குள், அ
கொடி இடையாளைத் தழுவிட
வளைத்தான் ரஸ்புடீன். அந்த
வஞ்சகத்தை அறிந்த கரலி
புடீனின் கரத்திற் சிக்காமல் ச
கெனத் திரும்பி, வேறு தி
புகுந்து, ஓடியே போய்விட்டாள்

ரஸ்புட்டீன் திகைத்தா
திகைத்தானே தவிர மரண
அவனைத் தழுவிட விரைந்தோடி
வதை அவன் அறிந்திடவில்லை.

தப்பியோடிய கரலி, மறுந
காலை அந்தப் பாதகனை வீழ்
திட்டமிட்டாள். அதே நேரத்
டூமா (ரஷ்ய பார்லிமெண்ட்) உ
பினன் பொரிச்கிவிட்ச், இத்தனை
காமுகன் ஒருவனின் கைப்பா
யாக ரஷியா இருப்பதா என
இடியென முழங்கிக்கொண்டி
தான் டூமாவில். இளவரசர்
போவ், சீமான் பாவ்லவிட்ச்
யோரும்கூட அதே நேரத்தில்
உரைத்துக் கொண்டிருந்தனர்
புட்டீனின் உயிர்பறிக்க!

கரலி, பொரிச்கிவிட்ச், பா
விட்ச், யூசுபோவ் நால்வரும்
னர். சூழ்ச்சித் திட்டம் ஒ
வகுத்தனர். அதன்படி இ

(7-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இருள் மெள்ள மெள்ள உல க்கவ்வ ஆரம்பிக்கவே, இரு ம் வீடு திரும்ப எழுந்து, கோட்டையை விட்டுக் ழ யிறங்கினர்.

காபாலும், குமாரும் வரு தக் கண்டதும், வீட்டின் ருக்கதவின் அருகே நின்று ண்டிருந்த வேணி உள்ளே ன்றாள்.

குமாரைக் காண்பதற்காக, லிருந்த உழவர்கள் பால் வீட்டின் முன்பு வந்து னர். கோபால், அவர்களுக் குமாரை அறிமுகம் செய்து த்து, "இவ்வளவு நாட்க ஏழைகளின் முன்னேற் ற்காகக் கலைத்தொண் றி வந்த குமார், நம்மூ து வந்திருப்பதைக் கண்டு ளைப் போலவே நானும் ச்சியடைகிறேன். குமார் றயில் உட்கார்ந்தபடியே லம் முழுவதையும் கற்ப கண்ணினால் காணும் ம் கலைஞன் அல்ல. இவர் ர்ச்சியும் ஆர்வமும் ண்ட இளம் சிங்கம்! தம் டய உயிருக்குயிரான கலை யும் ஒதுக்கிவிட்டு, இப் ழுது உங்களின் நலத்திற் என்னுடன் தொண்டாற்ற கு வந்திருக்கிறார்........." று பேசினர்.

ழவர்கள "கோபால் கி குமார் வாழ்க!" என்று த்தொலி எழுப்பி விட்டு ம் வீடு திரும்பினர்.

வணி சோறு படைக்க, ர் இருவரும் பேசிக் ண்டே சாப்பிட்டனர். அடிக்கடி நாணத்தோடு, வேண்டுமா, அது வேண் என்று கேட்டுக்கொண்டே த்த குமாரின் உள்ளத்தில் ணியின் நினைவை அதிக ற்று.

"கலைஞரே! அந்த ஊரில் எங்கேயாகிலும் அழகு இருந் தால், அந்த அழகில் கலையைக் கண்டு, கண்டதிலிருக்கும் இன் பத்தை உண்டு அங்கேயே சொக்கியிருந்து விடப் போகி றீர்... .."

குமுதினியின் உணர்ச்சி ததும்பும் இவ்வார்த்தைகள் குமாரின் கவனத்திற்கு வந்தன.

புன்னகையோடு, தலையைத் தூக்கி வேணியை நோக்கினன். வேணி தலை குனிந்தாள்!

ஏழாவது பகுதி
நிலவில் நிகழ்ந்தது!

"மனோரமா, நேரமாகிறது புறப்படு" என்று அவசரப் படுத்தினன் சிவன். சிவனின் அன்னை தாயாரம்மாள் அன் றொரு நாள் இரவில் வெளியில் சென்றதற்காகக் கோபித்துக் கொண்டாளே, அதுபோல இன் றும் கோபித்துத் திட்டுவாளே என்ற பயத்தினல் மனோரமா தயங்கி நின்றாள்.

"ஏன், மனோரமா, வர உன க்கு சம்மதமில்லையா?" என்று அருகில் சென்று கேட்டான் சிவன்.

"விருந்துண்ண விரும்பாதவர் களும் உண்டா?"

"உண்டு, கண்ணே!"

"நான் பார்த்ததில்லை!"

"உன் இனத்தவர்கள் விருந் தென்றால், காததூரம் ஓடுவார் கள், ஆனல் என் இனத்தவர் கள்........."

"பழைய பல்லவி! போதும் போதும்! தாங்களும் நானும் இன்னுமா வேறு வேறு இனம்?......"

"உல்லாசமாக வெளியே செல்லலாமென்றால், அழ ஆரம் பித்து விட்டாயே!...............கண் ணல்ல!.......கேலிக்குச் சொன் னல் யாராவது கோபித்துக் கொள்வார்களா?.......இதோ! இதோ!......."

"போதும் விடுங்கள்! கேலிக் கா பேசுகிறீர்! என்னை மணந் தது தவறென்று நீங்கள் அடிக் கடி நினைக்கிறீர்கள் போலிருக் கிறது! ஆகவேதான் உங்களை யும் அறியாமல் உன் இனம், என் இனம், என்று பிதற்றுக் கொண்டு வார்த்தைகள்......"

"பார்த்தாயா? என் மனதை நன்கறிந்த நீயே இப்படிச் சந்தே கித்தால்...." என்று கூறிக்கொ ண்டே அவளை, தன் மார்பில் சாய்த்துக் கொண்டு, முதுகில் தட்டிக்கொடுத்தான், அன்பாக.

"நேரமாகிறது, வா, கண்ணே!"

"நான் வரவில்லை! நீங்கள் போகலாம்!"

"இதற்கெல்லாமா கோபித் துக் கொள்வது? என் உயிரல்ல! ......"

அவளது கோவைக்கனி இதழை, மெதுவாக விரல்களால் நோகாமல் பிடித்து அசைத் தான்.

"குறும்பான செய்கை!"

"முரட்டுப் பிடிவாதம்!"

காதலனின் உடலிலிருந்து தன் உடலைப் பிரிக்க முயன்றாள்! சிவனா விடுபவன்? விடவில்லை! திமிறினாள்! முடியவில்லை!

"முரட்டுக் குணம்!"

"வாட்டு ஜம்பம்!"

சிவனின் "முரட்டுக் குணம்" மனோரமாவிற்குப் பிடிக்காத தல்ல. உள்ளத்தையும், உதட் டையும் தனித் தனியாக்கிக் காட்டுவதில் பெண்களுக்கு ஒரு அலாதியான இன்பம்! ஆனல் அவர்களால் அதில்தான் வெற்றி பெற முடிவதில்லை!

"என்ன மனோரமா?"

"வருவதற்கு எனக்கு ஆசை தான். ஆனால் மாமி திட்டுவார்கள்!"

"என்மேல் பழியைப் போட்டுவிடு! புறப்படு, புறப்படு!"

"மகன்கள் செய்வதெல்லாம் மருமகள்களின் தூண்டுதல் பேரில்தான் நடைபெறுகிறது என்பது மாமிகளின் முடிவு!"

சிறிது நேரத்தில், இருவரும் வெளியில் புறப்பட்டனர். நிலவு ஒளிவீசும் இரவுகளில், ஊரின் அருகேயுள்ள குளக்கரையில் அந்தக் காதலர் இருவரும் உட்கார்ந்து பேசிவிட்டு வருவது வழக்கம்.

சிவனும் மனோரமாவும் குளக்கரையில் உட்கார்ந்தார்கள். சிறு சிறு மேகக் கூட்டங்களுக்குள் நுழைந்து நுழைந்து வெளி வந்து கொண்டிருந்தது வெண்ணிலா. அக் குளக்கரையின் ஒரு பக்கத்தில் பெரியதொரு தோப்பு இருந்தது. அதில் நாலாவித மரங்கள், உயர்ந்தும் படர்ந்தும் வளர்ந்திருந்தன. பால்போல் நிலவு காய்ந்தாலும், இருள் அத் தோப்பை விட்டு வெளியே போவது கிடையாது. அந்தத் தோப்பை இரவு நேரங்களில் பார்த்தால், மனோரமாவின் உள்ளம் நடுநடுங்கும்.

அத் தோப்பில், இரவு நேரங்களில் கனிகளைத் தின்பதற்காகப் பறந்துவரும் வௌவால்களின் ஓசை ஒரு தனிப்பட்ட ஆறுதலை மனோரமாவிற்கு அளிக்கும்.

இருவரும் ஏதேதோ பேச ஆரம்பித்தனர். காதலர் தனித்துப் பேசும் பேச்சில், பெரும்பாலும் பொருள் இருக்காது, ஆனால் சுவை இருக்குமென்பார்களே அது முற்றும் உண்மை!

சிவன் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு இன்பத் தென்றலில் மிதந்து கொண்டிருந்த மனோரமா யாரோ வரும் காலடி சப்தத்தைச் செவியுற்று, திரும்பிப் பார்த்தாள்.

"அய்யோ!" என்று உரக்கக் கூவினாள்! அவள் உடல் உதற ஆரம்பித்தது! "என்ன? மனோரமா?!" என்று அவளை அணைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான் சிவன்! திடுக்கிட்டு, மனோரமாவை விட்டு விட்டு, விரைவாக எழுந்தான்.

(தொடரும்)

தாய் நாட்டின் நலிவு

மாவண்ணா, தேவராசன் இயற்றியது.

"...சொல்நயம் பொருந்திய செய்யுள்கள்..." —'பாரத தேவி'

"...என்றும் அழியாத இலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்க நூல்..." —'குடி அரசு'

விலை 0-3-0 தபாலில் 0-4-0

25 பிரசண்ட் கழிவு,

விவரங்கட்கு:—

இலக்குமி நூல் பதிப்பகம்
திருவத்திபுரம் (வ. ஆ.)

பழைய வெளியீடுகள் யாவும் திரும்ப அச்சிட்டு இருக்கிறோம். தேவைக்கு எழுதுக.

நண்பர் கருணாநிதிக்

எங்கள் நண்பரே! திரா... தின் தோழரே! கருணாநி... மனம் உடையாதீர்.

வாழ்க்கைத் துணையை இழ... பெறலரும் மாணிக்கத்தை... தீர். நும் அருமை பத்மாவை... தீர். எனினும் வருந்தாதீர்.

குடும்ப விளக்கு அணை... கலங்கரை விளக்கம் மறை... நும் வாழ்க்கை வழிகாட்டி... கள்ளனால் பறிக்கப்பட்டுவி... தாங்கரிய துக்கமே இது. என... துயர்க்கடல் படியாதீர். தே... கொள்ளாதீர். "துன்பத்... கொஞ்சம் சுவை பார்க்கப்போ... றேன்—இன்பத்தை என்னிட... நீட்டாதீர்—போய்விடுங்கள்"... றெல்லாம் கூறுதீர்.

இளஞ்சிங்கமே, இ... தோழரே, இயற்கையின்... இது எனக்கொண்டு, மன அ... பெற்று, மேற்போட்டுக் கொ... பொதுநலப் பணி முடிக்க... வாரீர்.

திராவிட வீரர்களே! வீராங்கனைகளே

தூத்துக்குடி அழைக்கிறது

★

திரள் திரளாய்த் திரண்டு வாருங்கள்!

★

மே 1, 2, சனி ஞாயிறுகளில்

தூத்துக்குடியில்

மாகாண திராவிடர் மாநாடு

★

அணி அணியாய் வாருங்கள்! திட்டம் தீட்டுங்கள்!
வருங்காலத் திராவிடத்தை உருவாக்குங்கள்!

★

தூத்துக்குடி அழைக்கிறது—இன்பத் திராவிடம் அழைக்கிறது—புதிய தமிழகம் அழைக்கிறது — உங்களுடைய எதிர்காலம் அழைக்கிறது—அந்த அன்பழைப்பை ஏற்க தவறுதீர்கள்—ஓடோடி வாருங்கள்! வந்து, அணி வகுப்பில் கலந்து நில்லுங்கள்!

[illegible]ாவம் செய்யுங்கள்! பாவம் செய்யுங்கள்!

[illegible]ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]டு சனியனே! அவனைப் பற்றி [illegible]ரேம் பேசினுற் கூட வாய் [illegible]ம்! பொரிச்கிவிட்ச், வா [illegible]வோம்! வா!"

[illegible]லெனின் கிராட், செயின்ட் [illegible]ர்ஸ் பர்க்காக இருந்த [illegible]த்தில்——அதாவது புரட் [illegible] முன், அந்த நகரத்தில், [illegible]ள் இரவு, டுமா உறுப்பினர் [illegible]க்சிவிட்ச் சீமான் பாவ்ல [illegible] இருவர்க்கும் இடையே [illegible]த உரையாடல் இது.

* * *

[illegible]வம் செய்யுங்கள்! பாவம் [illegible]யுங்கள்!

[illegible]ட்சம் வேண்டுமானுல்பாவம் [illegible]யுங்கள்!

[illegible]ாதர் கிருபை வேண்டு [illegible] பாவம் செய்யுங்கள்!

[illegible]தா உங்களை மன்னிக்க [illegible]டுமானுல் பாவம் செய்யுங்

[illegible]ஞானம் போக வேண்டு [illegible] பாவம் செய்யுங்கள்!

[illegible]ட்குப் பாவ மன்னிப்பு [illegible]டுமானுல் பாவம் செய்யுங்

[illegible]ம் செய்யுங்கள்! பாவம் [illegible]ங்கள்!

[illegible]விடமிருந்து தோன்றுவ [illegible]ம் கர்த்தாவின் அருள் [illegible]! உங்களுடையபாவங்களுக் [illegible]ம் மன்னிப்பு இந்த அருள் [illegible] உண்டு. இந்த அருள் ஒளி [illegible]டுமானுல் பாவம் செய்யுங்

[illegible]றம் செய்பவர்களுக்குத் [illegible]ண்டனை உண்டு. கொடுமை [illegible]வர்களுக்குத்தான் சிறை [illegible]உண்டு. பாவம் செய்பவர் [illegible]த்தான் பாவ மன்னிப்பு. [illegible] பாவமே செய்யவில்லையா [illegible]வத்தை மன்னிப்பது என் [illegible]ப்படி இருக்க முடியும்? [illegible] கர்த்தாவின் பாவ மன் [illegible] உங்கள் வாழ்க்கையைப் [illegible]டையதாக ஆக்க வேண்டு [illegible]பாவம் செய்யுங்கள்.

கர்த்தா, எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்த இறைவன். கொடியன் அல்லன், பழிக்குப் பழி வாங்கு— பாதகன் அல்லன் எல்லாருடைய பாவங்களையும் கழுவும் புண்ணியன். புனிதன். அவன் அருள் வேண்டுமாயின் பாவம் செய்யுங்கள்.

பாவம் செய்யுங்கள்! பாவம் செய்யுங்கள்!"

இதுபோல ஒரு உருவம் கூறிற்று அடக்கமான மென்மையான சிறிய குரலில்! உடனே ஏக காலத்தில் எண்ணற்ற குரல்கள் கூவின: பாவம் செய்யுங்கள் பாவம் செய்யுங்கள் என்று!

இரவு எட்டுமணி. மை இருட்டு. எங்கும் ஒளி என்பது துளியும் இல்லாத சமயம். அடர்ந்த காட்டின் நடுவே ஓர் பரந்த புல்வெளி. அதில் ஓர் ஆழமான பெரும் பள்ளம். பள்ளம் நிறைய பெரியபெரிய மரத் திம்மைகள்! விறகுச் சுமைகள்! உலர்ந்தசருகுகள்! தழைகள்! செத்தைகள்!

எதிரே ஒரு பிரம்மாண்டமான உருவம் வந்து அமர்கிறது. பருத்த உடல், பெரிய தொந்தி, மயக்கும் கண்கள், பிரகாசமான முகம், மனதிற்கு இனிய சொற்கள், அவற்றை உதிர்க்கும் தடிப்பான உதடுகள், அந்த உதடுகளுக்குக் கீழே அழுத்தமான முகவாய்க் கட்டை, இன்னும் கீழே ஒரு தாடி இப்படிப்பட்ட வடிவமும் தன்மையும் வாய்ந்த உருவம்.

அந்த உருவம். தன் முன் உள்ள விறகுக் கட்டைகளுக்குத் தீமூட்டுகிறது! அந்தத் தீயில் வாசனைப் பொருள்களைத் தூவுகிறது! தீ எழுகிறது; பரவுகிறது; ஓங்குகிறது; உயர்கிறது. அடர்ந்த இருளுக்கிடையே அந்த அழகிய ஒளி, தன் வெளிச்சத்தை நாற்புறமும் வீசுகிறது.

நெருப்பு ஜ்வாலை காற்றிலே அசைய அசைய, விஞடிக் கொரு முறை, "பாவம் செய்யுங்கள்; பாவம் செய்யுங்கள் புண்ணியம் வேண்டுமானுல் பாவம் செய்யுங்கள்" என்று மெள்ளக் கூறுகிறது எதிரே உள்ள உருவம். "பாவம் செய்கிறோம் பாவம் செய்கிறோம்; புண்ணியத்தை வேண்டி நாங்கள் பாவம் செய்கிறோம்" என்று உடனே பல குரல்கள் இணைந்து கூவுகின்றன—உரத்த குரலில்! காடே அதிரும் முறையில்!

அழகு ததும்பும் இளங்கன்னியரும் கட்டிளங் காளையரும், எண்ணற்ற பேர், ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு, சரச சல்லாபம் செய்து கொண்டு, பிடித்த கை நெகிழாது, மற்றவர் இடுப்பைச் சுற்றி வளைத்த கை தவருது, அந்த நெருப்புக் குழம்பைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்ட வண்ணம் கூத்தாடுகின்றனர்.

அவர்களிடமிருந்துதான் "பாவம் செய்கிறோம் — பாவம் செய்கிறோம்" என்ற குரல் எழுகிறது.

நெருப்பின் அலைகள் உயர உயர அந்த உருவம் தன் குரல் ஓசையை மெள்ள மெள்ள உயர்த்துகிறது. அந்தக் குரல் ஓசை உயரஉயர, நெருப்பைச் சூழ்ந்து நின்று கூத்தாடும் அந்த ஏமாளிகளின் குரல்ஓசை காது செவிடுபடும் அளவு ஓங்கி முழங்குகிறது. அந்த ஓசை ஓங்க ஓங்க, அவர்களுடைய ஆட்டமும் பாட்டமும் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே போகின்றன.

புண்ணியம் வேண்டி பாவம் செய்யுங்கள்—உருவம் மறுபடியும் மறுபடியும் கூறுகிறது.

பாவம் செய்கிறோம் பாவம் செய்கிறோம்—அவர்கள் மீண்டும் மீண்டும் கூவுகின்றனர்.

கடைசியில் அவர்களிலும் சிலர் மயங்கி வீழ்கின்றனர். சிலர் இந்த வெறியாட்டத்தை வெறுக்கின்றனர். சிலர் சீ! இது தகாது என எண்ணுகின்றனர். ஆனுல் அந்த உருவம், "மக்களே! எழுங்கள்! எழுங்கள்! மயக்கம் கூடாது! தயக்கமும் கூடாது! இன்னமும் கொஞ்சம் பாவம் செய்யுங்கள்—பாவம் செய்யுங்கள்—புண்ணியம் வேண்டுமானுல் பாவம் செய்யுங்கள்" என்று கூவுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

"இதோ தெரிகிறதே ஒரு தோபபு, இதனைத் "தாசித் தோப்பு" என்றழைக்கிறார்கள்; சிற்றரசனுக்கு இன்பந் தந்த சிங்காரிகளின் வீடுகளிருந்த இடமாம் இது!"

குமார் அந்தத் தோப்பைப் பார்த்துச் சிரித்தான்.

"அதோ, ஒரு பெரிய மண் மேடு தெரிகிறதே, அதனை "யானை மேடு" என்றழைக்கிறார்கள்!"

"ஏன் அப்படி யழைக்கிறார்கள்?"

"சிற்றரசன் ஆண்ட காலத்தில் அந்த இடத்தில் தான் யானைகளைக் கட்டி வைப்பார்களாம்!........"

"அதோ சிறிது தூரத்தில் ஒரு சிறிய தோப்புத் தெரிகிறதே அதற்கு என்ன பெயர்?" என்று குமார் வினவினான்.

"குமார்! அதற்குப் "புலவர் காடு" என்று பெயர். சிறிய தோப்பாக அது இருந்தாலும், அதனைப் பழக்கத்தால் மக்கள் காடு என்றே அழைக்கிறார்கள்."

"புலவர் காடு—அழகான பெயர்......"

"ஒரு காலத்தில், இந்த ஊரில் ஒரு சிறந்த புலவரிருந்தாராம்.

சிற்றரசன், அப்புலவரை அடிக்கடி கண்டு அவரிடம் அறிவு உபதேசத்தைப் பெற்று, மக்களை அதன்படி ஆண்டு வந்தானும். அந்தப் புலவர் வாழ்ந்து, இறந்து சமாதியான இடம் கூட இத் தோப்பில்தான் இருக்கிறதாம்!"

"அப் புலவரின் பெயர்?"

"யாருக்குத் தெரியும்?"

இருவரும் சிரித்தார்கள். சிறிது நேரம் மௌனமாகவே யிருந்தனர். கோட்டையின் அருகே, ஆடுகளும் மாடுகளும் மந்தை மந்தையாகச் சென்றதை இரு கலைஞர்களும் ரசிக்கத் தொடங்கினர்.

"கோபால், இங்கு கால்நடைகள் வளமாக யிருக்கின்றன!"

"ஆமாம்! புல்தரை ஏராளம்!"

"இந்த ஜமீன்தார், உழவர்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவே மாட்டேனென்று கூறுகிறாரா?"

"முதலில் சிறிது சி[illegible] சபரசத்திற்கு வர ஆரம்பி[illegible] அதற்குள் ஒரு வஞ்சகன[illegible] உள்ளத்தைக் கெடுத்து[illegible] டான்!......"

"யார் அவன்?"

"யாராக இருக்க மு[illegible] கிட்டு அய்யர் என[illegible] ஜமீன்தாரின் வீட்டில் [illegible] கெழுதுகிறான். அவனு[illegible] எல்லா முயற்சிகளும் [illegible] படைகின்றன. அவன் ஜமீன்தாரருக்கு மந்திரி! [illegible] யூரில் கோயில் சிலைக்கு [illegible] பூஜை செய்து கொண்டி[illegible] னும். இப்பொழுது ஜமீன்தாரருக்குப் பூஜை [illegible] கொண்டிருக்கிறான். கிட்[illegible] யரின் கையுள் அடங்கிய[illegible] சிறு பொம்மைதான் [illegible] தார்!"

"எப்படி அய்யருக்கு[illegible] ளவு செல்வாக்குக் [illegible] தது?"

"எனக்கொன்றும் ச[illegible] தெரியாது! ஆனால் ஏதேதோ பேசிக் கொ[illegible] கள்!........" என்று[illegible] கிட்டு கோபாலன் சிரித்த[illegible]

"ஜமீன்களில், எதி[illegible] பேசுவர்களை, மரத்தில் [illegible] தோல் உரிப்பார்கள் [illegible] கூறுவார்களே, அது இ[illegible] னில் கிடையாதா?"

"முன்பு இருந்தது [illegible] வழக்கம். மக்களுக்கு[illegible] றுமை யில்லாதிருந்த [illegible] கும், தனித்தனியாகப் [illegible] மக்களுள் ஒரு ச[illegible] கொண்டு மற்றொரு ச[illegible] தண்டிக்க முடிந்தது. [illegible] றுது மக்கள் ஒற்றுமை[illegible] ஒரே மனத்தோடு யிரு[illegible] ஜமீன்தாரரால் ஒன்றும் முடிவதில்லை!"

(9-ம் பக்கம் பார்[illegible]

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimol[illegible]
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B A.